பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
16 07 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பசுமை மற்றும் நீடித்த எதிர்காலத்தை உருவாக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பத்ம விருதுக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 31ஆம் தேதி வரை அனுப்பலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. நாட்டில் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் இந்தியா போஸ்ட் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

4. காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 90 பேர் உயிரிழந்தனர்.

5. ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இன்று இந்தியாவின் பி.வி. சிந்து, லக்ஷ்யா சென் உள்ளிட்டோர் களமிறங்குகின்றனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பசுமை மற்றும் நீடித்த எதிர்காலத்தை உருவாக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவை பகிர்ந்துள்ள பிரதமர், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் புதைபடிமம் அல்லாத எரிபொருள் பயன்பாட்டை குறைக்க 2030ஆம் ஆண்டு இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில், அதற்கு 5 ஆண்டுகள் முன்பாகவே 50 சதவீத இலக்கு எட்டப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தேசிய கல்விக்கொள்கையில் தாய் மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது குழந்தைகளை அவர்களது கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்துடன் இணைக்க உதவும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

கட்டாக்கில் ஒடிய மொழிக் கவிஞர் **Adikabi Sarala Das** பிறந்தநாள் விழாவில் பங்கேற்ற அவர், மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதானுக்கு 2024ஆம் ஆண்டுக்கான கலிங்கா ரத்னா விருதை வழங்கினார்.

மேலும் சரளா சம்மான் விருதை திரு. பிஜயா நாயக்கிற்கும் அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத்தலைவர், **Adikabi Sarala Das** இந்திய இலக்கியத்திற்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கியிருப்பதாக புகழாரம் சூட்டினார்.

நமது பண்முகத்தன்மை வானவில் போன்றது என்று குறிப்பிட்ட அவர், நம்மிடையே பல மொழிகள் இருந்தாலும் உணர்வு ஒன்றுதான் என்றார்.

பல்வேறு மொழிகள் மற்றும் மதங்களுக்கிடையே இந்தியா எவ்வாறு ஒற்றுமையாக உள்ளது என்பதைக் கண்டு உலகம் வியப்படைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய கல்வி மரபை மேம்படுத்துவதில் நாட்டில் உள்ள மொழிகளின் பங்களிப்பு மகத்தானது என்றும் குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் இந்தியா போஸ்ட் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று அஞ்சல் துறையின் வருடாந்திர வர்த்தக கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், அஞ்சல் துறையின் சேவை நாட்டின் அனைத்து பகுதிகளையும் சென்றடைந்திருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

மேலும் அஞ்சல் துறையை மேம்படுத்த சிறந்த கருத்துகளை தெரிவித்ததற்காக துறையின் வட்டார தலைவர்களுக்கும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

இந்தியா போஸ்ட் பெரிய தொழில் நிறுவனங்களைப் போன்ற கட்டமைப்பைக் கொண்டு புதுமை முயற்சிகளுடனும், பொறுப்புணர்வுடனும் செயல்படுவதாகவும் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா குறிப்பிட்டார்.

<<<<>>>>

2026ஆம் ஆண்டு பத்ம விருதுக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 31ஆம் தேதி வரை அனுப்பலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை பரிந்துரைப்பது கடந்த மார்ச் மாதம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த விண்ணப்ப பரிந்துரைகள் தேசிய விருதுகள் தளத்தில் ஆன்லைன் மூலம் மட்டுமே பெறப்படும் என்றும் மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பம் குறித்த விவரங்களை உள்துறை அமைச்சக இணையதளத்தில் விருதுகள் மற்றும் பதக்கங்கள் என்ற பக்கத்தில் தெரிந்துகொள்ளலாம்.

<<<<>>>>

தமிழகத்தில் இருந்து உருகுவே நாட்டிற்கு வெள்ளரிக்காய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளுடன் இணைந்து குத்தகை மூலம் சாகுபடி செய்யப்பட்ட இந்த வெள்ளரிக்காய், ஊறுகாய் தயாரிக்க பயன்படுத்தப்படும் பிரத்யேக ரகத்தைச் சேர்ந்ததாகும்.

அத்துடன் பிட்ஸா, பர்கர் போன்றவற்றிலும் இவை சேர்க்கப்படுகின்றன.

வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் அனுப்பப்படும் இந்த வெள்ளரிக்காய் அடங்கிய சரக்குப் பெட்டகங்களை பத்திரிகை தகவல் அலுவலக தென்மண்டல தலைமை இயக்குநர் திரு. பழனிசாமி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணைய மண்டல தலைவர் திருமதி ஷோபனா குமார் உள்ளிட்டோர் அனுப்பி வைத்தனர்.

விளைநிலத்தில் இருந்து உலக சந்தைக்கு நேரடியா ஏற்றுமதி செய்யப்படுவதால் விவசாயிகளின் வருவாயும், வாழ்வாதாரமும் மேம்படும் என்று வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தடுப்பூசி தயாரிப்பு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி தொடர்பான ஆய்வுகளில் உயிரி தொழில்நுட்பத்துறையில் **THSTI** நிறுவனம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்த்ளளார்.

ஹரியானா மாநிலம் ஃபரிதாபாதில் இந்த நிறுவனத்தின் மருத்துவ ஆராய்ச்சி மைய பணிகளை ஆய்வு செய்த அவர், கோவிட் தொற்று காலத்தில் இந்த நிறுவனத்தின் பங்களிப்பு பாராட்டத்தக்கது என்றார்.

சுவாசத் தொற்று, குடல் நோய் தொற்று போன்றவற்றுக்கு தனித்தனிப் பிரிவுகளுடன் மேம்பட்ட மருத்துவ ஆய்வுகளை மேற்கொள்ளும் வகையில் புதிய மையம் அமைக்கப்படுவதாகவும் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

தமிழக பள்ளிகளில் மாணவர்களை ‘ப’ வடிவில் அமர வைப்பது குறித்து மருத்துவர்கள் மற்றும் நிபுணர்களுடன் ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்கள் சிரமத்திற்கு ஆளாகாத வகையில் அவர்களை அமர வைத்து கல்வி கற்பிக்க வேண்டும் என்றார்.

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்திருப்பதாக கூறிய அவர், திமுக அரசு செயலற்ற அரசாக உள்ளது என்று குற்றம் சாட்டினார்.

கடந்த 4 ஆண்டுகளாக எதுவும் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது திடீரென ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தை தொடங்கியிருப்பது அரசின் நிர்வாக திறமையின்மையை வெளிப்படுத்துவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<>>>>

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 90 பேர் உயிரிழந்தனர். 278 பேர் காயமடைந்தனர்.

காஸாவின் டெல் அல் ஹவா பகுதியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 19 உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்

<<<<>>>>

7 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகளின் ஆதார் பயோமெட்ரிக் பதிவுகளை புதுப்பிக்குமாறு பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இந்திய தனித்துவ அடையாள ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட ஆதார் சேவை மையங்களில் இந்தப் பதிவுகளை இலவசமாக மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கைரேகை மற்றும் கருவிழி பதிவு செய்யப்படுவதில்லை என்பதால் அவர்களது புகைப்படம், பெயர், பிறந்த தேதி, முகவரி தொடர்பான ஆவணங்களை அளித்து ஆதாரில் பதிவு செய்துகொள்ளலாம் என்றும் தனித்துவ அடையாள ஆணையம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள விதிமுறைகளின்படி 5 வயது முதல் 7 வயது வரையிலான குழந்தைகளுக்கான கட்டாய பயோமெட்ரிக் புதுப்பித்தலுக்கு கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது.

ஆனால் 7 வயதைக் கடந்த குழந்தைகளுக்கு 100 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் அந்த ஆணையம் கூறியுள்ளது.

<<<>>>

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி. சிந்து, லக்ஷயா சென் மற்றும் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை இன்று களமிறங்குகிறது.

<<<>>>

20 வயதுக்குட்பட்ட மகளிர் நட்பு ரீதியான கால்பந்துப் போட்டியின்

இரண்டாவது மற்றும் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று உஸ்பெகிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி தாஷ்கண்டில் இரவு மணி 8.30க்கு தொடங்குகிறது.

<<<>>>

நெதர்லாந்தில் நடைபெற்ற ஹாக்கிப் போட்டியில் இங்கிலாந்து அணி 3-2 என்ற கோல் கணக்கில் இந்தியா-ஏ அணியை வென்றது.

இந்திய அணி அடுத்தகட்டமாக பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து அணிகளை எதிர்கொள்கிறது.

<<<>>>

சென்னையில் நடைபெற்று வரும் முருகப்பா கோப்பை ஹாக்கிப் போட்டியில் ரயில்வே அணி, தமிழக அணியை 6-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் ஐ.ஓ.சி. அணி – மலேசிய அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இன்றைய ஆட்டங்களில் மத்திய நேரடி வரிகள் வாரிய அணி – கடற்படை அணியையும், ராணுவ அணி – மஹாராஷ்டிராவையும், கர்நாடகா – மலேசியா ஜூனியர் அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**